செய்தி வெளியீடு எண்:494 நாள்:25.07.2021

<u>செய்தி வெளியீடு</u>

# சாலைப் பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிக்கும் ஒரகடம் தொழிற்சாலையில் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் திடீர் ஆய்வு

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப சாலைகள் அமைக்கும் பணி நெடுஞ்சாலைத்துறையின் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது. இதில், சாலைப் பாதுகாப்பு மிக முக்கியமாகிறது. விபத்துக்களைத் தவிர்க்க நெடுஞ்சாலைத்துறையால் வரையறுக்கப்பட்டுள்ள சாலை சமிக்ஞைகள் தயாரிக்கும் நிறுவனங்களில் தரமாகத் தயாரிக்கப்படுகிறதா என மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

## சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு

விபத்து இல்லாத் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உயரிய நோக்கமாகும். அதன் அடிப்படையில், வாகனப் போக்குவரத்தின் காரணமாக ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு இரவு நேரத்தில் ஒளிரும் வகையில் தரமான சாலை மையக் குறியீடுகள், கனமான சமிக்ஞைப் பலகைகள் மற்றும் **"மின்னும்"** வகையிலான பிரதிபலிப்பான் ஆகியவை முறையாக அமைக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் ஏற்படும் சாலை விபத்துக்களைத் தடுக்கும் நோக்கத்தில், சாலை விதிகள் சரியாகப் பின்பற்றப்பட வேண்டும். அதற்காகச் சாலைகளில் அமைக்கப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கனமாகவும், தரமானதாகவும், துல்லியமானதாகவும் இருக்க வேண்டும்.

இதில், சமிக்ஞைகள் மற்றும் குறியீடுகள் (Road signs and Markings) அமைப்பதில் பின்பற்றப்படும் வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

தெளிவாக அனைத்து மக்களுக்கும் எளிதில் புரியும் வகையில் அமைத்தல். சாலையைப் பயன்படுத்துவோர் எளிதில் பின்பற்றத்தக்க வகையில் அமைத்தல். பயனாளிகள் கவனத்தினை ஈர்க்கும் வகையில் அமைத்தல் ஆகிய வழிமுறைகள் பின்பற்றப்படுகிறது.

## <u>அளவுகள் மற்றும் விவரக் குறிப்புகள்</u>
## <u>(Size and specifications )</u>

எச்சரிக்கைப் பலகைகள் (Cautionary / Warning signs), வேக அளவுப் பலகைகள் (Speed limit signs), கட்டாயம் மற்றும் ஒழுங்குமுறைப் பலகைகள் (Mandatory / Regulatory signs), திசை மற்றும் இடத்தினை அடையாளப்படுத்தும் பலகைகள் (Direction and place Identification signs) அபாய வளைவு, பலமுனைச் சந்திப்பு, வழிகாட்டி பலகை, வேக அளவுகோல், சிக்னல் அமைத்தல், சோலார் ஒளிரும் சாதனங்கள், நடைபாதைக் கோடுகள், வேகத்தடை அமைத்தல், ரப்பர் கோடுகள் அமைத்தல் போன்ற பாதுகாப்புச் சாதனங்கள் சர்வதேசத் தரத்துடன் பொருத்தப்படவேண்டும் என்ற

நோக்கத்தில் மேற்கண்ட உபகரணங்கள் தயாரிக்கும் SBA Infrastech Services (P) Ltd., ஒரகடம் தொழிற்சாலையை மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று **(25.07.2021)** நேரில் ஆய்வு மேற்கொண்டு, தொழிற்சாலை நிர்வாகத்தினரிடம் அனைத்து உபகரணங்களும் நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் தயாரிக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வில், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.இளங்கோ, திரு.தேவராஜ் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் மற்றும் தொழிற்சாலை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**